1st August 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசாங்க அதிகாரிகள் கட்டாயப்படுத்தி நிதி வாங்கமாட்டார், வாங்கவும் கூடாது, அப்படி வாங்கினால், அந்தத் தகவலை அமைச்சருக்குத் தெரிவித்தால் பரிசிலனை செய்வார்கள் என்று சொன்னார்கள். மாவட்ட ரீதியில் ஒவ்வொரு அதிகாரிக்கும் இவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை எப்படி வசூல் செய்வது என்று என்னைப் போன்றவர்களைப் பார்த்து கேட்கிறார்கள். நான் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. இதற்கு என்னதான் பரிகாரம் காணப்போகிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறைந்தபட்சம் இவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : தலைவர் அவர்களே, இந்த நிதி வசூலிக்கப்படுவது எதற்காக ? என்ன காரணத்திற்காக வசூலிக்கப்படுகிறது என்ற விஷயத்தைப்பற்றி சொல்லுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : லாலா லஜபதிராய் ஒரு சிறந்த தேசத் தலைவர். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், நாட்டை பலப்படுத்துவதற்கும் இளைஞர்களுக்கு அவர் வழிகாட்டினார். அவர்களுடைய லட்சியத்தை நிறைவேற்றக்கூடிய வகையில்தான் நிதி பயன்படுத்தப்படும். இப்பொழுது உள்ள இளைஞர்கள் லாலா லஜபதிராயைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த நிதி வசூலிக்கப்பட்டது. இந்தக் கமிட்டி இதை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் முசிறி டிவிஷனிலுள்ள பஞ்சாயத்து யூனியன்களில் வசூலிக்கப்பட்டதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் யூனியனிலிருந்து எதாவது வசூல் செய்யப்பட்டதா ? எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யூனியனில் கொடுத்ததுதான் நான் சொன்னது.

' *God-father Scheme* '

*2 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the " God-father Scheme " sponsored in September 1963, has since been suspended; and

(*b*) if so, the reasons therefor?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) "அருளாளர் திட்டம்" என்ற அரசாங்கம் பொறுப்பேற்கும் திட்டம் எதுவும் இல்லை.

இது முன்னேடி முறையில் நிறைவேற்றப்பட்ட விருப்ப முறைத் திட்டமாகும்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : இந்தத் திட்டத்தின் விவரம் அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆரம்பப் பள்ளிகள் உயர்நிலை பள்ளிகளோடு இணைக்கப்படுவது என்பது கருத்து. இண்டக்கிரேடெட்டாக இருக்க வேண்டுமென்ருல் ஆரம்பப் பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளோடு கலந்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பது இதன் அடிப்படை நோக்கம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்தத் திட்டம் ராஜ்யம் முழுமையும் சிலகாலம் பரீட்சார்த்தமாக நடந்தது உண்மையா? அப்படியானுல், அது வெற்றிகரமாக நடந்திருக்கிறதல்லவா? அப்படியிருந்தும் ஏன் அரசாங்கம் அதைத் திட்டமாக ஏற்றுக் கொள்ளவில்லை?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் இதைத் திட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனுல் ஆங்காங்கே இந்தக் கருத்தை மனதில் வைத்து நடத்தப்பட்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : இந்த 'காட் ஃபாதர்' திட்டம் முன்பு கல்வி இயக்குனராக இருந்த திரு. சுந்தரவடிவேலு அவர்கள் கொண்டுவந்தது. அவர்கள் இப்போது வேறு பதவிக்குப் போய் விட்டதால் இத்திட்டம் கைவிடப்பட்டதா? இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்று கருதினுல் அரசாங்கம் அதை ஏற்று நடத்தலாம் அல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு கல்வி இயக்குனராக இருந்த திரு. சுந்தரவடிவேலு ஏற்படுத்தினுர். ஆனுல் அரசாங்கம் உத்திரவு போடவில்லை. ஆசிரியர்கள் ஆங்காங்கே எடுத்துக் கொண்டார்கள், வேண்டாமென்று கூறவில்லை.

திரு. வை. சங்கரன் : இப்போது எந்தெந்த இடங்களிலே அமலில் இருந்துவருகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் உத்தரவு போடவில்லை என்ற காரணத்தினுல், அந்தத் தகவல் இல்லை.